www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.**

**SPL.S.C. No.15/2023**

**P.W.1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | ஆர்.புதுப்பட்டி |
| வட்டம் | : | |
| தொழில் | : | பொது வாழ்க்கை |
| வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.05.2024.

எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :-

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர். எனது தலைவர் அவர்களும் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு பதிவு செய்ய பிறகு அவர் வன்னியர் ஜாதியை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன். கடந்த 20.06.2023 அன்று ஆயில்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த போது எங்கள் கட்சியை சேர்ந்த மாரிவளவன் என்கிற மாரிமுத்து என்பவர் இரவு 08.40 மணிக்கு எனது வாட்சாப்பிற்கு வீடியோ ஒன்றை அனுப்பினார். எங்கள் கட்சியின் தலைவர் ஒரு கையில் கழிவறையை சுத்தம் செய்வது போலவும், பினாயில் டப்பா கையில் வைத்திருப்பது போலவும் மற்றொரு கையில் துடப்பம் வைத்திருப்பது போலவும் கேலி செய்யும் விதமாக வருது வருது விலகு விலகு என்கிற தமிழ் சினிமா பாடல்களையும் பின்புலத்தில் ஒலிக்கவிட்டு சித்தரிக்கப்பட்டு பதிவிடப்பட்டு இருந்தது. எனது கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பனாக இருந்தார். அந்த கேலி சித்திர வீடியோ வாட்சாப்பில் வேகமாக பரவி வந்தது அதனால் எங்கள் பகுதியில் சமூக பிரச்சனை ஏற்பட்டுவிட்டுவிட கூடாது என்று நான் காவல் நிலையத்தில் 21.06.2023 அன்று

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

மாலை 06.00 மணிக்கு புகார் அளித்தேன். நான் புகார் அளிக்க காவல் நிலையம் சென்ற போது எதிரியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கேலி செய்யும் விதமாக வீடியோ வெளியிட்ட வழக்கில் காவல் நிலையத்தில் உட்கார வைத்திருந்தார்கள். மேலும் நானும் எங்கள் தலைவரை எதிரி கேலிக்குள்ளாகிய வீடியோவை ஆதாரமாக காண்பித்து அவர் மீது ஜாதிய வன்கொடுமை சட்டத்தின் கீழ் புகார் அளித்தேன். இது சம்மந்தமாக 22.06.2023 அன்று என்னை போலீஸார் விசாரித்தார்கள். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் 2001ம் ஆண்டு முதல் விடுதலை சிறுத்தை கட்சியில் செயல்பட்டு வருகிறேன். தற்போது மாவட்ட செயலாளராக இருந்து வருகிறேன். புகார் கொடுக்கும் போது துணை மாவட்ட செயலாளராக இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுக்க கட்சி தலைமை என்னை அறிவுத்தினார்களா என்றால் அறிவுறுத்தினார்கள். யார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. எனது கட்சி தலைவர் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் செயல்பாடு குறித்து பொதுமக்களுக்கு விமர்சனம் செய்ய உரிமை உள்ளது என்றால் உரிமை உள்ளது. ஆனால் அவரது சமூகத்தை குறிப்பிட்டு அவரை கேலிக்கு உள்ளாக யாருக்கும் உரிமை இல்லை. எனது புகாரில் எங்களது கட்சியை சேர்ந்த மாரிவளவன் என்பவர் மூலமாக தான் வாட்சாப்பில் எனக்கு அனுப்பப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் பார்வையிட்ட வீடியோ பதிவில் எங்கள் தலைவர் திருமாவளவன் அவர்களது புகைப்படத்தை தவிர வேறு எந்த புகைப்படமும் இல்லை என்றால் சரிதான். நான் பார்வையிட்ட அந்த பதிவில் ஜாதி ரீதியான எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்றால் வாசகம் இடம்பெறவில்லை ஆனால் அந்த வீடியோ எங்கள் தலைவரை கேலி செய்யும் விதமாக இருந்தது. நான் புகார் கொடுக்கும் வரை அந்த வீடியோ பதிவை யார் பதிவிட்டு வெளியிட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் சாட்சி மாரிவளவன் என்னிடம் தங்கள் ஏரியாவை சேர்ந்த காமராஜ் என்பவரின் இன்ஸ்டாகிராமிலிருந்து அந்த வீடியோ பதிவு வந்ததாக சொன்னார். நான் காவல் நிலையம் சென்றபோது எதிரியை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றால் கைது செய்தார்களா என்று தெரியாது ஆனால் இதே

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM12001208202३-orderno-1.pdf

www.ecourtsindia.com

தமிழக முதல்வரை கேலிக்குள்ளாக்கி ஒரு வீடியோ வெளியிட்ட வழக்கில் உட்கார வைத்திருந்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். அந்த வழக்கின் புகாரின் சாரம்சம் தெரியுமா என்றால் தெரியாது. நான் புகார் கொடுக்க சென்றபோது எதிரி மீது ஏற்கனவே ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது தெரியுமா என்றால் அது தெரியாது காவல் நிலையத்தில் உட்காரவைத்தது தான் தெரியும். நான் பார்த்த வீடியோ எத்தனை நிமிடங்கள் ஓடக்கூடியது என்றால் சுமார் 1 நிமிடம் இருக்கலாம். ஒரு வீடியோவை தயார் செய்யவேண்டும் என்றால் கணினியை கற்றுதேர்ந்தவர் தான் தயார் செய்ய முடியும் என்றால் சரிதான். எதிரியை பற்றி விசாரித்ததில் எதிரி படிப்பறிவு இல்லாத கூலி தொழிலாளி என்றால் அது எனக்கு தெரியாது. நான் பார்த்த வீடியோவை தயார் செய்யும் அளவிற்கு படிப்பறிவு கிடையாது என்றால் அவர் தயார் செய்யாவிட்டாலும் அவ்வாறு வரும் வீடியோ பதிவை வெளியிடுவது குற்றமாகும். எனது புகாரில் வீடியோவை உருவாக்கி பதிவிட்ட நபர் மீது தான் நடவடிக்கை எடுக்க கோரி புகார் அளித்தேன் என்றால் வீடியோவை பகிர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரினேன். நான் இந்த வழக்கில் புகார் அளிப்பதற்கு முன்பாகவே இதே சாரம்சத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரின் பேரில் ஆயில்பட்டி போலீஸார் எதிரி மீது குற்ற எண்.76/2023 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் அந்த விபரம் தெரிந்தும் மீண்டும் அதே சாரம்சத்தில் நான் புகார் அளித்தேன் என்று சொன்னால் முந்தைய புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட முதல் புகாரானது சாட்சி மாரிவளவன் என்பவர் கொடுத்த தகவலில் அடிப்படையில் அய்யாதுரை என்பவரால் கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகாரோடு கொடுத்த சீடி உண்மையானதா என்று சான்றிதழோடுதான் என்றால் அது உண்மையா, பொய்யா என்று கண்டுபிடிப்பது காவல் துறையின் வேலை. நான் பார்த்த வீடியோ ஆஜர் எதிரி உருவாக்கவும் இல்லை பகிரவும் இல்லை என்று சொன்னால் அவர் இன்ஸ்கிராமில் பகிரப்பட்ட வீடியோதான் அந்த வீடியோ ஆகும். நான் பார்த்தாக சொல்லப்படும் வீடியோ யார் பதிவேற்றம் செய்தார்கள் என்ற விபரம் தெரியாமல் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி தான் தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார் என்ற விபரம் தெரிந்து தான் நான் புகார் கொடுத்தேன். நான்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

www.ecourtsindia.com



சொன்னவாறு எதிரி எந்த ஒரு பதிவையும் இன்ஸ்டாகிராமில் பதிவிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பெயரில் எந்த ஒரு இன்ஸ்டாகிராம் ஐடியும் கிடையாது என்று சொன்னால் நான் புகார் அளிக்கும் போது எதிரியின் பெயரில் இன்ஸ்டாகிராம் ஐடி இருந்தது. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் எதிரி திட்டமிட்டு தான் இந்த வீடியோவை பதிவிட்டுள்ளார்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM12001282023-orderno-1.pdf

www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.

SPL.S.C. No.15/2023

P.W.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரிவளவன் (எ) மாரியப்பன் |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | குட்டைகாடு |
| வட்டம் | : | |
| தொழில் | : | டிரைவர் |
| வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.05.2024.

எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்எந்த வகுப்பை சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. கடந்த 20.06.2023 அன்று எனது போனில் இன்ஸ்டாகிராம் பார்த்தேன். அப்போது காமராஜ் என்பவரது ஐடியில் இருந்து எங்கள் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களது ஒரு கையில் பினாயிலும், மற்றொரு கையில் துடைப்பமும் வைத்திருப்பது போலவும் அந்த வீடியோவில் வருது வருது விலகு விலகு என்ற தமிழ்பாடல் ஒலிப்பது போலவும் வீடியோ பார்த்தேன். அதை பார்த்து எங்களது கட்சி தோழர் அ.சா.1 பெரியசாமி அவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் அனுப்பி நமது தலைவரை பற்றி தவறான ஒரு வீடியோ பதிவு வெளியிட்டுள்ளார்கள் என்று தகவல் கூறினேன். மறுநாள் 21.06.2023 அன்று மாலை 06.00 மணியளவில் அருகில் உள்ள ஆயில்பட்டி காவல் நிலையத்தில் நானும் அ.சா.1 மற்றும் காட்சி தோழர்கள் சென்று அ.சா.1 பெரியசாமி (எ) நீலவானத்து நிலவன் மூலமாக புகார் அளித்தோம். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பார்த்த வீடியோ யாருடைய ஐடியில் சென்று பார்த்தேன் என்றால் காமராஜ் என்பவரது ஐடியில் சென்று பார்த்தேன். காமராஜ் என்பவர் தனிப்பட்ட முறையில்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

அவரது ஐடியில் எனக்கு அந்த வீடியோவை பகிர்ந்தாரா என்றால் இல்லை. நான் அந்த வீடியோவை பார்வையிட்டு புகார்தாருக்கு எந்த செயலி மூலமாக அனுப்பினேன் என்றால் வாட்சப் மூலமாக அனுப்பினேன். நான் சுமார் எத்தனை நபர்களுக்கு அனுப்பினேன் ஐந்து அல்லது ஆறு நபர்களுக்கு அனுப்பி இருப்பேன். அந்த ஐந்து, ஆறு நபர்களில் அய்யாதுரையும் ஒருவர் என்றால் இல்லை. நான் அய்யாதுரைக்கு எந்த வீடியோவும் அனுப்பவில்லை. நான் போன் மூலம் தகவல் சொல்லி அய்யாதுரை என்பவர் புகார் அளித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் சென்ற போது எதிரி ஏற்கனவே வேறுஒரு வழக்கில் கைது செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுக்க அ.சா.1 வுடன் நானும் சென்றேன் என்றால் ஆமாம். நான் காவல் நிலையம் சென்ற போது எதிரியை நான் பார்த்தேனா என்றால் பார்க்க வில்லை. புகார் கொடுக்க நான் உடன் சென்ற போது புகார் சம்மந்தமாக என்னை போலீஸார் விசாரித்தார்களா என்றால் இந்த பதிவை முதலில் யார் பார்த்தார் என்று என்னை விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்த அதிகாரி யார் என்றால் மங்களாபுரம் காவல் நிலைய காவலர் விசாரித்தார். அதன் பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக யாராவது என்னை விசாரித்தார்களா என்றால் 22.06.2023 அன்று விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் ஆஜர் எதிரி எந்த வீடியோ பதிவையும் பதிவிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்த்த வீடியோவை எதிரிக்கு சொந்தமான ஐடியில் இருந்து வெளியிடப்பட்டது என்று போலீஸார் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் இல்லை அந்த வீடியோவை பார்க்கும் போது அதில் பெயர் குறிப்பிட்டு உள்ளதால் எனக்கு முன்பே தெரியும். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் புகார்தாரர் எங்கள் கட்சியை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.**

**SPL.S.C. No.15/2023**

**P.W.3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கதிர்வேந்தன் (எ) காசிலிங்கம் |
| தந்தை பெயர் | : | அண்ணாமலை |
| கிராமம் | : | நாரைகிணறு |
| வட்டம் | : | |
| தொழில் | : | ஹோட்டல் தொழில் |
| வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.05.2024.

எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து ஹோட்டல் தொழில்செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 20.06.2023 அன்று இரவு மாரிவளவன் இன்ஸ்டாகிராமில் தலைவர் திருமாவளவன் அவர்களை தவறாக சித்தரித்து வீடியோ போட்டுள்ளார்கள் என்று எனக்கு தகவல் சொன்னார் அந்த வீடியோவையும் எனக்கு அனுப்பினார். உடனே நான் பெரியசாமி என்பவருக்கு தகவல் சொன்னேன். 21.06.2023 அன்று மாலை 06.00 மணிக்கு ஆயில்பட்டி காவல் நிலையத்தில் பெரியசாமி புகார் அளித்தார் நான் அவருடன் இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பார்த்த வீடியோவை மாரிவளவன் வாட்சப் மூலம் அனுப்பிய பிறகுதான் நான் முதல் முதலாக அந்த வீடியோவை பார்த்தேன். நான் பார்த்த வீடியோவில் வேறு எந்த ஒரு புகைபடமோ, ஜாதி ரீதியான வாசகமோ இடம் பெறவில்லை என்றால் முதலமைச்சர் சம்மந்தப்பட்ட படமும் இருந்தது, எங்கள் தலைவர் தலித் என்பதால் நாங்கள் புகார் அளித்தோம். நான் காவல் நிலையம் சென்றபோது ஆஜர் எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். ஏற்கனவே மாரிவளவன் கொடுத்த

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

தகவலின் அடிப்படையில் அய்யாதுரை என்பவர் கொடுத்த புகாரின் பேரில் எதிரி வரவழைப்பட்டு உட்காரவைக்கப்பட்டு இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் செல்லுவதற்கு முன்பாக இதே சாரம்சத்தில் ஒரு புகார் அளிக்கப்பட்டு இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்த்த வீடியோவை எத்தனை நபர்களுக்கு அனுப்பி இருப்பேன் என்றால் சுமார் 10 நபர்களுக்கு அனுப்பி இருப்பேன். இரண்டு, மூன்று வாட்சப் குரூப்புகளுக்கும் அனுப்பி இருப்பேன். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் புகார்தாரர் எனது கட்சிகாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM12001208 2023-orderno-1.pdf

www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.

SPL.S.C. No.15/2023

P.W.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெயசீலன் |
| தந்தை பெயர் | : | மகேந்திரன் |
| கிராமம் | : | நாரைகிணறு |
| வட்டம் | : | |
| தொழில் | : | கல்லூரி படிப்பு |
| வயது | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.05.2024.

எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1 பெரியசாமியை எனக்கு நன்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 20.06.2023 அன்று இரவு சுமார் 08.30 மணியவில் மாரிவளவன் எங்களுக்கு ஒரு வீடியோவை இன்ஸ்டாகிராமில் அனுப்பி இருந்தார். அந்த வீடியோவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் டாக்டர் தொல்.திருமாவளவன் என்பவரை ஒரு கையில் டாய்லட் கழுவும் பிரஸ் மறு கையில் பிணாயில் வைத்திருப்பது போலவும் பின்புலத்தில் வருது வருது விலகு விலகு வேங்கை வெளியே வருது என்று ஒலிக்க செய்து இருந்தது. மறுநாள் 21.06.2023 அன்று ஆயில்பட்டி காவல் நிலையத்தில் பெரியசாமி புகார் கொடுத்தார் நான் அவருடன் சென்றேன். மறுநாள் 22.06.2023 அன்று ராசிபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை தனியாக அழைத்து விசாரணை செய்தாரா என்றால் இல்லை. எனக்கு இன்ஸ்டாகிராம் மூலமாக வந்த பதிவை இன்ஸ்டாகிராமில் ஷேர் செய்தேனா என்றால் வாட்சபிலும், இன்ஸ்டாகிராமிலும் ஷேர் செய்தேன். நான்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

முதல் முறை காவல் நிலையம் செல்லும் எதிரி அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். இதே விபரத்தின் பேரில் ஏற்கனவே ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதன் பேரில் எதிரி காவல் நிலையத்தில் உட்கார வைக்கப்பட்டரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அ.சா.1 என் கட்சிக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.

SPL.S.C. No.15/2023

P.W.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீராம் |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | நாரைகிணறு |
| வட்டம் | : | |
| தொழில் | : | விவசாயி |
| வயது | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.05.2024.

எதிரிஸ்ரீ ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி ஜாதியை சேர்ந்தவர் என்றால் வன்னியர் ஜாதியை சேர்ந்தவர். கடந்த 20.06.2023 அன்று மாரிவளவன் என்பவர் இன்ஸ்டாகிராமில் ஒரு வீடியோவை அனுப்பி இருந்தார். எங்கள் கட்சி தலைவரை இழிவுப்படுத்தும் விதமாக அந்த வீடியோ இருந்தது. அந்த வீடியோவில் தலைவரின் ஒரு கையில் பிணாயில் டப்பாவும், மற்றொரு கையில் பிரஸ் வைத்திருப்பது போலவும் பின்புலத்தில் வருது வருது விலகு விலகு என்ற பாடல் ஒலிக்க செய்து எங்கள் தலைவரை அசிங்கப்படுத்தி இருந்தார்கள். இது சம்மந்தமாக 21.06.2023 அன்று எங்கள் கட்சியின் பெரியசாமி அவர்கள் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். நான் உடன் சென்றேன். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நாங்கள் காவல் நிலையம் சென்ற போது எதிரி அங்கு இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான் புகார் கொடுக்க எங்கு சென்றோம் என்றால் ராசிபுரம் சென்றோம். ராசிபுரத்தில் யாரிடம் புகார் கொடுத்தோம் என்றால் காவல் துணை

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-1.pdf

கண்காணிப்பாளர் என்பவரிடம் புகார் கொடுத்தோம். யார் யார் புகார் கொடுக்க சென்றோம் என்றால் பெரியசாமி, மாரிவளவன், ஜெயசீலன், கதிர்வேந்தன் மற்றும் நான் சென்றேன். எனக்கு வந்த வீடியோ எதில் வந்தது என்றால் இன்ஸ்டாகிராமில் வந்தது. அதை மாரிவளவன் தான் அனுப்பி இருந்தாரா என்றால் ஆமாம். எனக்கு வந்த வீடியோவை மற்றவர்களுக்கு நான் எப்படி மற்றவர்களுக்கு அனுப்பினேன் என்றால் வாட்சாப்பில் அனுப்பினேன். வாட்சாப் குரூப்புகளுக்கும் அனுப்பினேன். நானும் மேற்படி கட்சியில் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், புகார்தாரர் என் கட்சி காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM12001208202З-orderno-1.pdf